# தமிழகமும் தமிழ்வழிக் கல்வியும்

**ஆ.ரூபா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊற்றங்கரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### தோற்றுவாய்

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி என்று தமிழர்களையும் பலமொழிகட்குத் தலைமையும்மிக்க மேதமையும் உடைய மொழி, உயர் மொழி, தனித்து இயங்கவல்ல ஆற்றல்சார்ந்த தனிமொழி, திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூயமொழி, செம்மொழி என்று பல்வேறு அடைமொழிகளைத் தமிழ் மொழி பெற்றுள்ளது. என்றாலும் தமிழ் மொழியானது ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்னர் பேசும் மொழி, வீட்டு மொழி, வயிற்றுப் பிழைப்புக்கான மொழி என புதிய அடைமொழிகளைப் பெற்றுக் கல்விமொழியில் இருந்து நீங்கும் அளவிற்கு எவ்வாறு மாற்றம்பெற்றது என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

### ஆங்கிலேயரின் வருகையும் தமிழ் மொழியும்

ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் முகலாய பேரரசர் ஜஹாங்கீரின் அனுமதிபெற்ற பிறகு இந்தியாவுடன் 1617இல் வணிகம் செய்ய ஆரம்பித்தது. “விசய நகரப் பேரரசின் பிரதிநிதியான சந்திரகிரி அரசரிமிருந்து 1639இல் கிழக்கிந்திய வணிகக்குழுமம் சென்னைப் பட்டினத்தைக் குத்தகைக்கு எடுத்து அடுத்த ஆண்டே அங்கு ஒரு கோட்டையைக் கட்டியது.

1773இல் கொண்டு வரப்பட்ட ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் வணிகக்குழுமம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடும் தன் அறிக்கையின் 1813ஆம் ஆண்டு அறிக்கையில் அது “இந்திய மக்களுக்குச் சமய மற்றும் நல்லொழுக்க நீதியில் ஒரளவு பயனுள்ள கல்வியை அறிமுகப்படுத்த முயலவேண்டும்” என்று கூறியது.

இதற்குப் பத்தாண்டுகளுக்குப் பிறகு 1823இல் குழும அறிக்கையின் அடிப்படையில் “பொதுமக்கள் பயிற்றுக் குழு” உருவாக்கப்பட்டது. பின்னாளில் இக்குழுவிற்குத் தலைமையேற்ற “தாமஸ் பா.ஃ.பிங்டன் மெக்காலே” என்பார் இந்தியர்களுக்கு ஆங்கிலக்கல்வி போதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து இதற்கான திட்டங்களை முன்வைக்க அப்போது ஆட்சியிலிருந்த பெண்டிங் இதன் நிறைவேற்றத்திற்கான ஆணையை 1835 மார்ச் 7ஆம் நாள் பிறப்பித்தார். இதுவே “மெக்காலே கல்வித் திட்டம்” எனப்பட்டது. இந்தத் திட்டத்தின்வழி தமிழகம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் ஆங்கிலமே ஆட்சி மொழியாகியது. கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆங்கிலமே பாடமொழி, கல்வி மொழியாகியது. இதற்குப் பத்தொன்பது ஆண்டுகள் கழித்து 1854 ஜுலை 19இல் “சர் சார்லஸ் உட்” என்பார் தலைமையில் “கட்டுப்பாட்டு வாரியம்” என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இது கடந்த 19 ஆண்டுகால அனுபவத்தைக் கணக்கில்கொண்டு மெக்காலே கல்வியை இந்திய மொழிகள் அனைத்திலும் கொண்டுசெல்ல, கல்வி அவரவர் தாய்மொழியிலேயே இருக்க மற்றும் மதசார்பற்றதாகவும் இருக்க பரிந்துரைத்தது.

1857 இல் படைவீரர் பேரெழுச்சிக்குப் பிறகு நிர்வாகம் வணிகக்குழுமத்திடமிருந்து நேரடியாகவே பிரிட்டி' அரசுக்குப் போக, இதற்குச் சுமார் 25 ஆண்டுகள் கழித்து 1882 இல் அப்போது ஆட்சியிலிருந்த ரிப்பன் "சார்லஸ் உட் கல்வித் திட்டத்தை" ஆராய்ந்து பரிந்துரைகள் நல்க, "ஹண்டர்" என்பார் தலைமையில் ஒரு குழு அமைத்தார். இது கல்வி மற்றும் நிர்வாகம் இந்தியர் கைக்கு மாறவும், கல்விக்கு மானியம், பொதுவான பாடநூல்கள் வழங்கவும் மாநில அரசின் வருவாயில் ஒரு பகுதி கல்விக்கு என ஒதுக்கவுமான பல்வேறு பரிந்துரைகளை வழங்க கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இந்தியாவெங்கும் பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இப்பல்கலைக்கழகங்களைக் கண்காணிக்க 1925இல் மாநிலங்களுக்குகிடையேயான "பல்கலைக் கழக வாரியம்" அமைக்கப்பெற்றது. 1935 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தியச் சட்டத்தின்படி பல்கலைக்கழக நிர்வாகம் உள்ளிட்ட அனைத்தும் மாநிலஅரசின் கைக்கு வந்தது.

1926ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகப் பேரவை "தாய் மொழி வாயிலாகக் கற்பிக்கலாம்" என்று தீர்மானம் நிறைவேற்றியது.

1938இல் உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைத் திணித்த இராசாசி தான் அதுகாறும் உணர்நிலைப் பள்ளிகளில் பயிற்றுமொழியாக இருந்த ஆங்கிலத்தை அகற்றி அங்கு தமிழைப் பயிற்று மொழியாக்கினார்.

1963இல் பக்தவச்சலம் முதலமைச்சராயிருந்தபோது உயர்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் ஆங்கிலவழிக் கல்விக்கான ஒரு பிரிவு ஒதுக்கிக்கொள்ள ஆணை பிறப்பித்து, ஆங்கிலவழிக் கல்விக்கு பாதை திறந்து அம்மோகத்திற்குப் புத்துயிர் ஊட்டினார்.

1948ஆம் ஆண்டிலிருந்து எட்டாம்வகுப்பு முதல் ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாகக் கற்பிக்கப்பட்டது. பின் 1952ஆம் ஆண்டு முதல் ஆறாம் வகுப்பிலிருந்து, 1957 ஆம் ஆண்டு முதல் ஐந்தாம் வகுப்பிலிருந்தும், 1963ஆம் ஆண்டு முதல் மூன்றாம் வகுப்பிலிருந்தும், ஆங்கிலம் மொழிப்பாடமாக கற்றுத்தரப்படுகிறது. இடையில் 1985இல் எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கவேண்டும் என்று ஒரு திட்டம் முன்வைக்கப்பட இதற்குப் பலத்த எதிர்ப்பு எழுந்ததையடுத்து அத்திட்டம் கைவிடப்பட்டு 1989ஆம் ஆண்டு முதல் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும் பழைய நிலையே தொடர்ந்து நீடித்துவருகிறது.

1956ஆம் ஆண்டு "தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை" அடுத்து அறிவியல் தொழில்நுட்பங்களைத் தமிழில் கொண்டுவர அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போதைய காமராஜ் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம் "தமிழால் முடியும்" என்கிற ஒரு நூலையே எழுதினார்.

1967 இல் தி.மு.க ஆட்சி பீடம் ஏறிய 1968 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து புகுமுக வகுப்புகளிலும், 1969இல் இருந்து பட்டப்படிப்புகளிலும், கலைப்பாடங்கள் மட்டுமின்றி, அறிவியல் பாடங்களையும் தமிழில் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் தொடங்கின. அவை, எந்த முயற்சியும் மேற்கொண்டு தொடர்வதற்கான நடவடிக்கைகள் இல்லாமல் அப்படியே முடங்கிப்போயின.

பட்டப்படிப்புகளைத் தமிழில் படிக்க தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1971 ஆம் ஆண்டு பல பாடநூல்களை வெளியிட்டது. ஆனால் அந்நூல்கள் இன்றுவரை தமிழில் மறுபதிப்பு செய்யப்படவில்லை. இதனால் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்குப் போதுமான தமிழ்ப்பாடநூல்கள் கிடைப்பதில்லை எல்லாரும் வெறும் "வினா – விடை நூல்களை" மட்டுமேவைத்துப் படித்துத் தேர்வு எழுதும் போக்கே நீடித்து வருகிறது."

31.10.1999 மற்றும் 01.11.1999 ஆகிய இரு தினங்கள் தமிழ்ச்சான்றோர் பேரவை நடந்தது. இப்பேரவையில் ஒரு தீர்மானத்தை சிலம்பொலி செல்லப்பனார் முன்மொழிந்தார். அவை "தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி நூறு தமிழறிஞர்கள் சாகும்வரை பட்டினிப்போர் நடத்துவது என்பது அத்தீர்மானம். தீர்மானம் முன்மொழியப்பட்டதுதான் தாமதம் அரங்கின் பார்வையாளர்கள் அனைவரும்

எழுந்துநின்று கரவொலியெழுப்பித் தீர்மானத்தை வரவேற்றனர். தமிழறிஞர்கள் இறைக்குருவனார், தமிழண்ணல், கி.த.பச்சையப்பன் முதலான தமிழறிஞர்களும் தமிழுணர்வாளர்களும் பட்டினிப்போராட்டத்திற்குத் தங்கள் பெயர்களை மேடையிலேயே கொடுத்தனர். விழா நிறைவுற்ற சில நாட்களிலேயே தமிழகமெங்கிருந்தும் 400 பேர், தமிழுக்காக நடைபெறும் இப்பட்டினிப்போரில் கலந்துகொள்ளத் தங்களின் பெயர்களைக் கொடுத்தனர். தமிழுணர்வுள்ள அனைவரையும் உசுப்பி எழுப்பியது இப்போராட்ட அறிவிப்பு."

**பட்டினிப்போரின் கோரிக்கைகள்**

1. ஐந்தாம் வகுப்புவரை தமிழில் மட்டுமே அனைத்துப் பாடங்களும் அமைய வேண்டும்.
2. உயர்கல்வி அனைத்தையும் தமிழிலேயே வழங்க வேண்டும்.
3. தமிழ்வழியில் படித்தோர்க்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கவேண்டும். இம்முழக்கங்கள் தமிழ்வழிக் கல்விக்குத் தமிழறிஞர்கள் எத்தகைய பங்களிப்பினை அளித்துள்ளனர் என்பதை உணர்த்துகின்றன.

25.04.1999 அன்று பட்டினிப்போர் தொடங்கியது. இப்போரின் தீவிரத்தைஉணர்ந்த 26.04.1999 அன்று காலை, போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்த அமைச்சர் தமிழ்க்குடிமகன் பேச்சுவார்த்தை நடத்தினார். "தமிழகஅரசு தொடக்கக் கல்வியில் தமிழ் மட்டுமே மொழிப் பாடமாகவும், பயிற்று மொழியாகவும் இருக்கும்வகையில் செயல்திட்டம் வகுக்க ஏப்ரல் 30க்குள் குழு அமைப்பது என்றும், அக்குழு மே 31 க்குள் பரிந்துரை வழங்குவது என்றும் எழுத்து வடிவில் உறுதியளித்தது. பொறியியல் கல்வியைத் தமிழில் வழங்குவது குறித்து அனைத்திந்திய தொழினுட்பக்கல்விக் குழுவுடன் உயர்கல்விச் செயலர் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தி, 1999 – 2000 கல்வியாண்டிலேயே தமிழ் வழியில் வகுப்புகளைத் தொடங்குவது என்றும் உறுதியளித்தது.

அரசு சார்பான 41,417 பள்ளிகளிலும் இப்போது தமிழே பயிற்றுமொழியாகவும் பாடமொழியாகவும் உள்ளது. எஞ்சியுள்ள மெட்ரிகுலேசன் முதலான 2,402 பள்ளிகளில் மட்டுமே இந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒன்று முதல் ஐந்து வகுப்புக்குரிய தொடக்கப்பள்ளிகள், நாடு முழுதும் பரவியுள்ள மழலையர்பள்ளிகள் தொடங்கி மெட்ரிகுலேசன்பள்ளிகள் வரையில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் ஒன்றே மொழிப்பாடமாகவும் பயிற்றுமொழியாகவும் இருக்கவேண்டுமென்ற கொள்கையில் தமிழ்அறிஞர்களுக்கும் தமிழகஅரசுக்கும் எந்தவொரு கருத்து வேறுபாடும் கிடையாது. இக்கொள்கையினை நிறைவேற்றும்வகையில் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு ஏப்ரல் 30க்குள் ஒரு குழு அமைக்கப்படும். மே 31க்குள் அக்குழுவிடமிருந்து பரிந்துரை அறிக்கைபெற்று வரும்கல்வியாண்டிலேயே அதனை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் அனைத்தையும் அரசு செய்யும்." மேற்கண்ட கருத்துக்கள் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு மாறாக இன்று ஆங்கிலவழிக் கல்விதான் பெருகி வருகிறது. அரசு பள்ளிகள் இன்றளவில் அதிகரித்து வருகிறது என்பது ஒருபுறமிருக்க அன்றைய தமிழ் ஆர்வலர்கள் தமிழ்வழிக் கல்விக்காகப் போராடியுள்ளனர் என்பது முற்றிலும் உண்மை.

தமிழ்கல்வியை எதிர்க்கும் ஆங்கிலவழிக் கல்விஆர்வலர்கள் இதற்கும் முற்றுகையிட்டனர். "இந்த அரசாணை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் உரிமையைப் பறிப்பதாகவும் தங்களுடைய உரிமையைப் பாதிக்கிறது என்றும் வாதாடினர்." இதன்விளைவு இன்று தமிழ்வழிக் கல்வி நிலையங்கள் குறைந்து ஆங்கிலவழிக் கல்விக்கூடங்கள் பெருகிவருகின்றன.

**தாய்மொழியே பாடமொழி**

"தற்பொழுது தொடக்கக்கல்வியில் மூன்று மொழிகளைப் போதிப்பது கைவிடப்படவேண்டும். தொடக்க நிலையில் தாய்மொழிதவிர வேறெந்த மொழியும் போதிக்கப்படக் கூடாது. இன்னும் நேரடியாகச் சொல்வதென்றால், 'ஆங்கிலவழித் தொடக்கப்பள்ளி'களுக்கு உடனடியாக முடிவு கட்டவேண்டும். தொடக்க நிலையில் தாய் மொழியைப் போதிப்பதன் மூலம் பின்னர் உயர்நிலையில்

சிறந்த முறையில் தனிப்பாடமாகப் போதிக்கத் தேவையில்லை என்று குழந்தைக் கல்வி பற்றிய அனுபவங்கள் புலப்படுத்துகின்றன. மற்ற அனைத்துப் பாடங்களையும் போதிப்பதற்கு தாய்மொழி மட்டுமே போதனாமொழியாக இருக்கமுடியும். தங்களது சொந்த மொழியில் இவற்றைப் பயிலுவதன் மூலம் மாணாக்கர்கள் போதுமான அறிவைப்பெறுகின்றனர். அதிலும் குறிப்பாக, தங்களது தாய் மொழி மூலம் இவற்றை கற்பதால் மொழியறிவும் மேம்படுகிறது.” மேற்கண்ட கருத்துக்கள் ஆங்கிலவழிக் கல்வியின் மோகத்தால் தமிழ்வழிக் கல்வியும், தமிழ்ப்பாடமும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன என்பதும் தமிழ்மொழிக் கல்வியின் நன்மையினை மாணாக்கரும், பெற்றோர்களும், சமூகமும் உணரவில்லை. அதனை உணர்த்தவே கல்வியாளர்கள் தாய்மொழிக்கல்வியின் மேன்மையினை எடுத்துரைக்கின்றனர் என்பது வெள்ளிடையாகத் தெரிகிறது.

**தமிழும் இறையாண்மையும்**

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் உள்ள தமிழ் நீங்கலாக வேறு எந்தத் தேசிய இனமும் தனது மொழிக் கலப்பை, நீக்கு என்று போராடமுடியாது. மற்ற தேசிய இனத்தினரின் தாய்மொழியில் உள்ள சமற்கிருதச் சொற்களை நீக்கு. தமிழ்ச் சொற்களை நீக்கு அயல்மொழிச் சொற்களை நீக்கு என்று போராடினால் போராடுகின்ற தேசிய இனம் தனித் தேசிய இனமாகத் தனித்தன்மையுடன் வாழ முடியாது. ஆனால் தமிழ்மொழி பிறமொழிச் சொற்களை நீக்கினால் தனித் தேசிய இனமாக தனித் தன்மையுடன் வாழ முடியும். எடுத்துக்காட்டாக, ‘நியூசு’ என்ற ஆங்கிலச் சொல்லிலே வேர் இல்லை.

நார்த், ஈசுட், வெசுட், சௌத் என்ற நான்கு திசையின் முன் எழுத்தை மட்டும் எடுத்து என், ஈ, டபுல்யு, எசு” என்ற சொல்லை உருவாக்கியுள்ளனர். உண்மையில் நான்கு திசைகளில் இருந்து மட்டும்தான் செய்தி வருகிறதா? கிழக்கு, வடகிழக்கு, வடக்கு, வடமேற்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு, தென்கிழக்கு, மற்றும் மேல்விண்வெளி, கீழ்நீர், நிலம், கனிமவளம் கொண்ட பத்துத் திசை ஆகும். இங்கே மூலக்கரு “செய்தி” அவ்வளவுதான். திசை அல்ல மூலக்கரு”. இவ்வாறு பலமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதுதான் நாகரிகம் என்ற பெயரில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தங்களை அம்மா என்றும் அப்பா என்றும் அழைப்பதைவிட ‘மம்மி’ என்று அழைப்பதையே விரும்புகின்றனர். ‘மம்மி’ என்பதற்கான பொருள் பதப்படுத்தப்பட்ட பிணம் என்பதை அறியாமல் இருக்கின்றார்கள் பலர். சிலர் பொருள் தெரிந்தும் அதைத் தடுக்க முயல்வதில்லை. இப்படியாகப் பன்மொழிச் சொற்கள் கலந்த கலவையாகத் தமிழ் மொழி உலா வந்து கொண்டிருக்கிறது.

**தமிழ்மொழி வீட்டுமொழி**

“நான் பசியோடு இருந்தபோது என் அம்மாவுடன் தமிழில் பேசினேன் - உணவுக்காக. நான் குறும்புகள் செய்தபோது பையன்களோடும் பெண்களோடும் கன்னடத்தில் பேசினேன். கணிதப் பேராசிரியரான என் அப்பா உயரே மாடியில் இருந்தார். என்னை அழைத்தபோதெல்லாம் என்னுடன் ஆங்கிலத்தில் பேசினார்.” என்று ராமனுஜம் எழுதியிருப்பதாகக் குமரேசன் கூறியிருப்பதைக் கவனிக்கும்பொழுது தமிழ்மொழி என்பது வீட்டுக்குள் அடங்கியிருக்கும் தட்டுமுட்டுச் சாமான்கள் போலவும் உணர்வுக்காக, தேவைக்காகப் பயன்படும் ஒரு மொழியாக மட்டும் பயன்பட்டதால்தான் ஆங்கிலமொழி ஒர் அறிவுமொழி என்ற அமைப்பில் மேலோங்கியதாகக் கருதமுடிகிறது.

தமிழ்மொழியின் நிலை தற்காலத்தில் மிகவும் மோசமாக உள்ளது. “தமிழ் நாட்டில் ஒருவர் தமிழைப் படிக்காமலேயே, தமிழ் தெரியாமலேயே, பட்டம் பெறலாம்; ஆராய்ச்சி செய்யலாம்: வேலைக்குப் போகலாம் என்கிற அவலம் நீடிக்கிறது.” வேறு எங்கும் இந்தநிலை நீடிக்காது என்பதை இராசேந்திரசோழன் பதிவுசெய்துள்ளார். இதன் நோக்கம் இதற்கு மேலும் இந்நிலை இருக்கக் கூடாது எனத் தன் உள்ளக்குமுறலைத் தெரிவித்ததாகவும் அறியலாம்.

**நிறைவாக**

தாய்மொழிக் கல்விக்கு பிற நாடுகள் முக்கியத்துவம் கொடுக்கும்நிலையில் தமிழ் மக்கள் தாய் மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. காரணம் தமிழ்மொழி வழிக் கல்வியின் முக்கியத்துவம் மக்களிடத்தில் எடுத்துச்செல்லப்படவில்லை. இன்றைக்குத் தமிழ் மொழியானது அடித்தட்டு மக்களிடம்

மட்டுமே அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பது புலனாகிறது. தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழகஅரசானது பல்வேறுவகையான ஊக்கத்தொகையும் வேலைவாய்ப்பில் முன்னுரிமையும் வழங்கிவந்தாலும் பெரும்பான்மையான மக்கள் ஆங்கிலவழிக் கல்வியையே நாடுகின்றனர். மேலும் பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதுதான் நாகரிகம் என்ற பெயரில் இன்றைக்கு ஆங்கிலத்தையும் தமிழையும் இரண்டறக் கலந்துபேசுவது வழக்கமாகியுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. இராசேந்திரசோழன், தமிழே கல்விமொழி, ஆட்சிமொழி, தொடர்புமொழி, உதயம் வெளியீடு, மயிலம், மூன்றாம் பதிப்பு, 2005.
2. பார்த்திபராஜா.கி, தமிழ் மொழி அரசியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர் சென்னை, 2010.
3. இராமசுந்தரம், கல்வி, இந்திய மாணவர் சங்கம், சவுத் விஷன், சென்னை, 2000.
4. சின்னப்பத்தமிழர்.அ.சி மொழிவழித் தேசியமும் தமிழினப் படிப்பினையும், தமிழம்மா பதிப்பகம், சென்னை, 2009.